திருத்தப்பட்டுத் தரப்படுகின்ற அளவுக்கும் இருக்கிறது. தாள்கள் மாற்றப்படுகின்றன, கூட்டிப் போடப்படுகின்றன, ஆசிரியர்கள் அனுப்பப்படுகின்றனர் என்பது ஓரளவுக்கு இருந்தாலும் கூட, பரவலாகப் பேசப்படுகின்ற அளவுக்கு சூழ்நிலைகள் இருந்தன. அந்தக் குறைபாட்டிற்கு இடமே இல்லை. ஏனென்றால், பொதுத் தேர்தல் நடக்கிறபோது, எப்படி ஓட்டுப்பெட்டிகள் எல்லாம் கொண்டுபோய் வைக்கப்பட்டு வருகிறதோ, அது போல யாருக்கு எந்தத் தொகுதிப் பெட்டி வருகிறது, என்ன ஓட்டுகள் எண்ணுகிறார்கள் என்று தெரிந்துகொள்ள முடியாதபடி செய்யப்படுகிறதோ, அது போல ஆசிரியர்கள் எல்லாம் உட்கார வைக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட பள்ளியினுடைய விடைத்தாள்களை 15, 15 விடைத்தாள்களாகக் கொண்டுபோய் திருத்துவதற்காகக் கொடுக்கிறார்கள். எந்த ஆசிரியருக்கு எந்தப் பள்ளியினுடைய விடைத்தாள்கள் வருகின்றன, இன்றைக்கு எந்தப் பள்ளியினுடையது வருகிறது என்று யாரும் சொல்ல முடியாது. ஆகவே அப்படிப்பட்ட குறைபாடு இல்லாமல், திருப்திகரமாக நடைபெறுகிறது. விரைவாக நடைபெறுகிறது. இன்னமும்கூட கிட்டத்தட்ட ஜூன் 1-ம் தேதி புகுமுக வகுப்புத் தேர்வு முடிவை வெளியிடுகிற அளவுக்கும் முயற்சி எடுக்கப்படுகிறது. ஒரு வார காலம் முன்னதாக, அதாவது மே மாதம் 21, 22 தேதியிலேயே வெளியிட வேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அதை இன்னும் முன்னதாக வெளியிட்டால், கல்லூரியிலே சேர்வதற்கு மாணவர்கள் பல்வேறு வகைகளிலே ஆயத்தப்படுத்திக்கொள்வதற்கு வசதி ஏற்படும். பத்து நாட்கள் அல்லது 15 நாட்கள் இடைவெளி கொடுப்பது நல்லது. ஆகவே மே 15-ம் தேதி கூட வெளியிடுகிற அளவுக்குச் செய்யலாம். அந்த அளவுக்குச் செய்வதற்கு இந்த ஆண்டு கம்ப்யூட்டர் போன்றவைகளைப் பயன்படுத்தலாமா என்ற முயற்சி இருந்துகொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்து அடுத்து ஆண்டிலிருந்து அந்த முறையை மேற்கொள்ளலாம்.

MR. CHAIRMAN : Three questions have taken 20 minutes. Hon. Members should not put supplementaries again and again.

An Hon. MEMBER : That shows the importance of a particular question.

MR. CHAIRMAN : The Hon. Members should not repeat the supplementaries on the same question. The time at the disposal of the House is precious.

Non-Educational Work.

*119 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether primary school teachers are being asked to do non-educational work ; and

(*b*) if so, the details thereof ?

1972 டிசம்பர் 15]

கல்வித் தொடர்பற்ற பணி.

திரு. எல். பலராமன் : (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கல்வித் தொடர்பற்ற பணியைச் செய்யுமாறு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கோரப்படுகின்றனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Special Pay to the Headmasters of Elementary Schools.

*120 *Q.*—THIRU K. S. GANAPATHY (on behalf of THIRU S. MUTHUSWAMY) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether there is any proposal with the Government to grant Special Pay to the Headmasters of Elementary Schools ; and

(*b*) if so, the date from which it will be granted ?

தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தனிச் சம்பளம்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தனிச் சம்பளத் திட்டத்தை தமிழ்நாடு அரசு வழங்கும் உத்தேசம் உண்டா?

(இ) ஆமெனில். எப்போது முதல் வழங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.